2002 மே 7]

தமிழகத்திலே அரிசிக்கு வரி போட்டிருப்பதைத் தவிர்த்து, வெளி மாநிலங்களிலேயிருந்து வருகிற நெல்லுக்கு, அரிசிக்கு வரி விதித்து, அதன் மூலமாகத் தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுடைய நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல், அரிசியைப் பொறுத்தவரை ஒரே food zone என்பதுதான் இந்திய அரசினுடைய கொள்கை. அந்தக் கொள்கையை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று காலங்காலமாக, கடந்த காலத்திலேயிருந்து மத்திய அரசு தமிழக அரசை வற்புறுத்தி வந்துள்ளது. ஆனால் கடந்த அரசு தைரியமாக அதை எடுக்க முடியாத நிலையிலே இருந்தது. ஆனால் இந்த அரசு தைரியமாக மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒரே food zone-ஆகக் கொண்டு வருகிற அந்த அடிப்படையிலே இப்போது அந்தத் தடையை நீக்கியிருக்கிறோம். ஆகவே, கேரளாவில் இருந்தும், கர்நாடகத்தில் இருந்தும், ஆந்திராவில் இருந்தும் வருகின்ற அரிசியைத் தடுக்க வேண்டிய அவசியம் நமக்கு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 299, திரு சி. இராசேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

299—

தனி வட்டம்

***1916—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2002 மே 7

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-லிருந்து 1996 வரை ஆட்சியில் இருந்தபோது அன்றையதினம் தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியத்தில், ஒரத்தநாடு தாலுகாவைப் பிரித்து தனி தாலுகா தொடங்குவதற்காக மாவட்ட வருவாய் அலுவலர்களுடைய ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, அன்றையதினம் அதற்கான கருத்துரு ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலே வந்தவர்கள் அது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் என்ற காரணத்தால், அவர்கள் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். இப்போது மீண்டும் மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக, தமிழக ஏழை, எளியோர்களுடைய வாழ்வு வளம்பெருகின்ற, ஒளி விளக்கை ஏற்றி வைத்திருக்கின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது இந்தத் திருவோணம் தொகுதி ஒரு தனித் தாலுகாவாக ஆவதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். திருவோணம் ஒன்றியத்திலிருந்து 4 பஞ்சாயத்துகள் பேராவூரணி தொகுதியிலும், பட்டுக்கோட்டை தாலுகாவிலும் இருக்கின்றன. அந்த ஊர்களிலிருந்து ஒரத்தநாட்டுக்கு வர வேண்டுமென்று சொன்னால் 30 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. ஏழை எளியவர்களுடைய வாழ்வில் அக்கறை கொண்டுள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு நிதிநிலை இல்லை என்று சொன்னாலும் வரும் ஆண்டில் இதைப் பரிசீலனை செய்து அந்தப் பகுதி மக்களுடைய ஏக்கத்தைத் தீர்க்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 3 கோட்டங்கள் உள்ளன. தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை ஆகிய 3 கோட்டங்களிலே ஒரத்தநாடு வட்டத்தின்கீழ் திருவோணம் ஒன்றியம் வருகிறது. தற்போது தமிழகத்தினுடைய Joint Commissioner அவர்கள் ஒரு அளவுகோலை நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த அளவுகோலின்படி 2000 ஆம் ஆண்டுக் கணக்குப்படி மக்கள்தொகை

2002 மே 7]

2,34,356 என்று இருக்கிறது. பரப்பளவு 590.87 சதுர கிலோமீட்டர் இருக்கிறது. கிராமங்களுடைய எண்ணிக்கை 125 ஆக இருக்கிறது. ஊராட்சிகளுடைய எண்ணிக்கை 88 ஆக இருக்கிறது. புதிதாக ஒரு வட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் குறைந்தது 2½ இலட்சம், 3½ இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். பரப்பளவை எடுத்துக்கொண்டால் 560-க்கு மேல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அந்த வட்டத்தினுடைய மக்கள் தொகை இரண்டு இலட்சத்து 34 ஆயிரம் ஆக இருக்கிறது. ஆகவே, தற்சமயம் அந்த அளவுகோலின்படி சாத்தியக்கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 300, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

300—

பேருந்து வசதி

***9723—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் கரிக்காலி, சி.சி. குவாரிக்கு போதிய பேருந்து வசதி இல்லாததால், குஜிலியம்பாறையில் இருந்து சி.சி. குவாரி வரை பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேடசந்தூர் தொகுதியில் உள்ள கரிக்காலி மற்றும் சி.சி. குவாரிக்கு சிற்றுந்துகள் மூலம் பொதுமக்களின் தேவைக்கேற்ப போதிய போக்குவரத்து வசதி உள்ளதால் கூடுதலாகப் பேருந்து வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.